


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 341 | 4 Pages | 7.7.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 341 | 4 பக்கங்கள் | 7.7.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |





**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யாப் படும்**

**விளக்கம்:**
நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்கு முன்) நல்ல அறச்செயலை விரைந்து செய்யத்தக்கதாகும்.

## இந்து அமைப்பு நிர்வாகியின் செல்போனில் 50 ஆபாச வீடியோக்கள்




பெங்களூரு, ஜூலை 7

கர்நாடக மாநில இந்து ஜாகரணா வேதிகே எனும் இந்து அமைப்பின் தட்சிண கன்னடா மாவட்ட நிர்வாகியாக இருந்து வருபவர் சமித் ராஜ் தரகுட்டே. இவர் தனியார் பஸ் மீது கல் வீசி தாக்கியதாக போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் சமித்ராஜ் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். மேலும் அவரது செல்போனையும் கைப்பற்றி ஆய்வு செய்தனர்.

இதற்கிடையே சமித் ராஜும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்று முன்தினம் சமித் ராஜின் செல்போனில் இருந்த தகவல்கள் குறித்த விவரம் போலீசாருக்கு தெரியவந்தது. அதில் 50க்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்கள் இருப்பது தெரியவந்தது. மேலும் கடலோர மாவட்ட பகுதிகளில் அரசியல் தலைவராக வலம் வரும் ஒரு முக்கிய நபரின் ஆபாச வீடியோவும் அதில் இருந்தது தெரியவந்தது. இதனால் போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து போலீசார் சமித் ராஜுக்கு விசாரணைக்கு ஆஜராகும்படி நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

அவரிடம்விசாரணைமேற்கொண்டால்தான்மேலும்பலதிடுக்கிடும் தகவல்கள் தெரியவரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 16ந்தேதி ஆனிவார ஆஸ்தானம்



திருமலை, ஜூலை 7

திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வருடாந்திர ஆனிவார ஆஸ்தானம் வருகிற 16ந்தேதி நடக்கிறது. அதையொட்டி கோவில் ஆழ்வார்திருமஞ்சனம்எனப்படும்தூய்மைப்பணி15ந்தேதிநடக்கிறது. அதற்காக, 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் கோவிலில் வி.ஐ.பி. பிரேக் தரிசனங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

னவே 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் முக்கியமான பிரமுகர்களை தவிர, வி.ஐ.பி. பிரேக் தரிசனங்களுக்கான பரிந்துரை கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதை, பக்தர்கள்கவனத்தில்கொண்டு தேவஸ்தானத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## காஷ்மீரில் அமர்நாத் பக்தர்கள் சென்ற 5 பஸ்கள் அடுத்தடுத்து மோதல்; 36 பேர் காயம்




ஜம்மு, ஜூலை 7

காஷ்மீரில் புகழ்பெற்ற அமர்நாத் குகை கோவிலுக்கு செல்லும் புனித யாத்திரை கடந்த 3ந் தேதி தொடங்கியது. இதில் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள்சென்றுவருகிறார்கள். அந்தவகையில் ஜம்முவின் பகவதி நகர் முகாமில் தங்கியிருந்த 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் 2 குழுக்களாக நேற்று அதிகாலையில் பஹல்காம் அடிவார முகாமுக்கு புறப்பட்டனர்.

இதில் ஒரு குழுவினர் சென்ற ஏராளமான பஸ்கள் ஜம்முஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் அணிவகுத்து சென்று கொண்டிருந்தன. காலை 8 மணியளவில் ராம்பன் மாவட்டத்தின் சந்தர்கோட் அருகே சென்றபோது, அணிவகுப்பின் கடைசி பஸ்சின் பிரேக் பழுதானதாக தெரிகிறது.

இதனால் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து ஓடிய அந்த பஸ், பிற பஸ்கள் மீது அடுத்தடுத்து மோதியது. இதில் 5 பஸ்கள் ஒன்றோடொன்று மோதி சேதமடைந்தன.கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த பயங்கர விபத்தில், 36 பக்தர்கள் லேசான காயமடைந்தனர். உடனே அவர்கள் மீட்கப்பட்டு ராம்பன் மாவட்ட ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

அங்கே சிகிச்சை பெற்ற அவர்கள் மீண்டும் யாத்திரையில் இணைந்தனர். இதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் வேறு வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதனால் சிறிது நேரம் தடைபட்டிருந்த அமர்நாத் புனித யாத்திரை மீண்டும் தொடங்கியது.இதற்கிடையே விபத்து குறித்து தகவல் அறிந்த காஷ்மீர் துணை நிலை கவர்னர் மனோஜ் சின்கா, மாவட்ட அதிகாரிகள் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகளிடம் தகவல்களை கேட்டறிந்தார்.

மேலும் காயமடைந்தவர்களின் நிலை குறித்து அறிந்து கொண்ட அவர், மேற்கொண்டு புனித யாத்திரை சுமுகமாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதைப்போல மத்திய மந்திரி ஜிதேந்திர சிங்கும் மாவட்ட துணை கமிஷனரிடம் தொலைபேசியில் பேசி விபத்து குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் இது குறித்து தனது எக்ஸ் தளத்தில், 'கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை. பக்தர்களுக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளது. அத்துடன் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது' என குறிப்பிட்டு இருந்தார். அமர்நாத் பக்தர்கள் சென்ற பஸ்கள் விபத்தில் சிக்கிய சம்பவம் காஷ்மீரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# இந்தி திணிப்புக்கு எதிராக மகாராஷ்டிராவிலும் மொழி உரிமைப்போர் பாஜவுக்கும், புதிய கூட்டாளிகளுக்கும் தமிழ்நாடு மறக்க முடியாத பாடத்தை மீண்டும் கற்பிக்கும்: முதல்வர் தாக்கு

சென்னை. ஜூலை 7

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளபதிவில் கூறியிருப்பதாவது:

இந்தித் திணிப்பை முறியடிக்க திமுகவும், தமிழ்நாட்டு மக்களும் தலைமுறை தலைமுறையாக நடத்தி வரும் மொழி உரிமைப் போர், மாநில எல்லைகளைக் கடந்து இப்போது மராட்டியத்தில் போராட்டச் சூறாவளியாகச் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தியைக் கற்பித்தால் தான் நிதியை ஒதுக்குவோம் என்று சட்டத்துக்குப் புறம்பாகவும் அராஜகமாகவும் நடந்துகொள்ளும் பாஜ, தாங்கள் ஆட்சி செய்யும் மகாராஷ்டிராவில் மக்கள் எழுச்சிக்கு அஞ்சி 2ம் முறையாகப் பின்வாங்கி இருக்கிறார்கள்.

இந்தித் திணிப்புக்கு எதிராகச் சகோதரர் உத்தவ் தாக்கரே தலைமையில் நேற்று மும்பையில் நடந்த வெற்றிக் கொண்டாட்டப் பேரணியின் எழுச்சியும், உரை வீச்சும் மிகுந்த உற்சாகம் தருகிறது.



த்தர பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன என்றும், இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன இந்திபேசாதமுன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள் என்றும் ராஜ்தாக்ரே எழுப்பிய கேள்விகளுக்கு, இந்தியையும் சமஸ்கிருதத்தையும் வளர்ப்பதையே முழுநேர முன்னுரிமையாக வைத்திருக்கிற ஒன்றிய அரசிடம் எந்த பதிலும் இருக்காது என்பதை நன்றாக அறிவேன்.

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்திசமஸ்கிருதத்தைத் திணிக்கும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஒருங்கிணைந்த கல்வித் திட்ட (சமக்ர சிக்ஷா அபியான்) நிதி ரூ.2,152 கோடியை விடுவிப்போம் என்று தமிழ்நாட்டைப் பழிவாங்கும் போக்கை ஒன்றிய அரசு மாற்றிக் கொள்ளுமா? தமிழ்நாட்டுப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காகச்சட்டப்பூர்வமாக வழங்க வேண்டிய நிதியை உடனே விடுவிக்குமா?

இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்கள் நடத்திவரும் போராட்டம் உணர்வுமயமானது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமானது. தர்க்கப்பூர்வமானது. இந்தியாவின் பன்மைக் கலாசாரத்தை பாதுகாப்பதற்கானது. வெறுப்பின் பாற்பட்டது அல்ல. இந்தித் திணிப்பால் ஏராளமான இந்திய மொழிகள் அழிந்த வரலாற்றை அறியாமலும், இந்தியாவை இந்தி நாடாக்கும் செயல் திட்டத்தைப் புரிந்துகொள்ளாமலும், இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்ற பசப்பு வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைகளைப் போல ஒப்பித்துக் கொண்டிருக்கும் இங்குள்ள அப்பாவிகள் சிலர், இனியாவது திருந்த வேண்டும்.

மராட்டியத்தின் எழுச்சி அவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும். தமிழுக்கு நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை, கீழடி நாகரிகத்தை அங்கீகரிக்க மறுக்கும் ஆணவம் நீடிக்க விட மாட்டோம்.

தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பாஜ செய்துவரும் துரோகத்துக்கு பாஜ பரிகாரம் தேட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கும் அவர்களது புதிய கூட்டாளிகளுக்கும் தமிழ்நாடு மறக்க முடியாத பாடத்தை மீண்டுமொருமுறை கற்பிக்கும். ஒன்றிணைவோம் வா, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

# அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள முதல்வர், உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் அன்புமணி

சென்னை ஜூலை 7

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 180 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 96 கல்லூரிகளின் முதல்வர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதனால் அரசு கல்லூரிகளில் நிர்வாகமும், கல்வித்தரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயிலும் அரசு கல்லூரிகளில் முதல்வர்களை நியமிக்காமல் அவை சீரழிவதை தமிழக அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது.


முதல்வர்கள் இல்லாத கல்லூரிகளில் 60க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் ஓராண்டுக்கும் மேலாக காலியாக கிடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. 2024ம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழகம் முழுவதும் 13 கல்லூரிகளின் முதல்வர் பணியிடங்கள் மட்டுமே காலியாக இருந்தன. 2024ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்த எண்ணிக்கை 30 ஆகவும், 2024 ஜூன் மாதத்தில் 60க்கும் அதிகமாகி விட்டன. கடந்த மாதத்தில் இந்த எண்ணிக்கை 90 ஆக உயர்ந்திருந்த நிலையில், ஜூன் மாத இறுதியில் 6 பேர் ஓய்வு பெற்றதால் காலியிடங்களின் எண்ணிக்கை 96 ஆக உயர்ந்துள்ளது.

கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்களை நிரப்புவது என்பது கடினமான பணி அல்ல. கல்லூரி முதல்வர்கள் பணி மூப்பு அடிப்படையில்தான் நியமிக்கப்படுகிறார்கள். கல்லூரி ஆசிரியர்களின் பணி மூப்புப் பட்டியல் தயார் நிலையில் உள்ளது. அதன் அடிப்படையில் ஒரே நாளில் அனைத்துக் கல்லூரிகளுக்கும் முதல்வர்களை நியமிக்க முடியும். ஒவ்வொரு ஆண்டும் ஓய்வு பெறும் முதல்வர்கள் யார், யார்? என்பது அரசுக்கு முன்கூட்டியே தெரியும். ஆனாலும், அவற்றை நிரப்பாமல் அரசு வேறு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

ஒருபுறம் தமிழக அரசு கலை & அறிவியல் கல்லூரிகளில் சுமார் 10,500 பணியிடங்கள் உள்ள நிலையில், அவற்றில் 9,000க்கும் கூடுதலான பணியிடங்கள் காலியாக உள்ளன. தமிழ்நாட்டில் அனைத்து அரசு கல்லூரிகளுமே கவுரவ விரிவுரையாளர்களை மட்டுமே நம்பியிருக்கின்றன. இத்தகைய சூழலில் முதல்வர்களும் இல்லை என்றால் அரசு கல்லூரிகளில் கட்டிடங்கள் மட்டும்தான் இருக்கும்; கல்வி இருக்காது. விளம்பர வெளிச்சத்தில் மட்டுமே பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசுக்கு இந்த அடிப்படை உண்மை கூட தெரியவில்லை.

அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்பும் வகையில் 4,000 புதிய உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாள் முதல் தி.மு.க. அரசு தொடர்ந்து கூறி வருகிறது. அதன் பின்னர் காலியிடங்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்தைத் தாண்டி விட்ட பிறகும் புதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற அக்கறையும், பொறுப்பும் தி.மு.க. அரசுக்கு இல்லை.

அரசு கல்லூரிகளில் முதல்வர் பணியிடம் காலியாக இருந்தால், அந்த இடத்தில் பொறுப்பு முதல் அமைச்சராக நியமிக்கப்படும் மூத்த இணைப் பேராசிரியருக்கு மாதம் ரூ.40,000 வரை கூடுதல் ஊதியம் வழங்க வேண்டும். இதனால் மாதத்திற்கு சுமார் ரூ.38.40 லட்சம் வீதம் ஆண்டுக்கு ரூ.4.60 கோடி வரைகூடுதலாக செலவு ஏற்படும். ஆனாலும், இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தி.மு.க. அரசு உறங்கிக் கொண்டிருக்கிறது.



உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதலிடத்தில் இருப்பதாக பெருமை பேசுவதில் மட்டும் பயனில்லை. 4 ஆண்டுகளாக அரசு கல்லூரிகளுக்கு ஒரே ஒரு உதவிப் பேராசிரியர் கூட நியமிக்கப் படவில்லை; இரு ஆண்டுகளாக கல்லூரி முதல்வர்களை நியமிக்கவில்லை. அப்படியானால் தமிழகத்தில் யாருக்கும் பயனில்லாத இப்படி ஓர் அரசு எதற்காக தொடர வேண்டும் என்ற வினாதான் எழுகிறது.

உயர்கல்வியை மேம்படுத்துவதற்கு பதிலாக அதற்கு சவக்குழி தோண்டும் செயல்களில் தி.மு.க. அரசு ஈடுபடக் கூடாது. தமிழகத்தில்காலியாகஉள்ள96அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் முதல்வர்கள் பணியிடங்களை அரசு உடனடியாக நிரப்ப வேண்டும். அதேபோல், அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள 9,000க்கும் கூடுதலான உதவிப் பேராசிரியர் பணியிடங்களை விரைந்து நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறுஅதில்தெரிவித்துள்ளார்.

# ஆய்வின் போது அமைச்சர் சிவசங்கரை யார்? என்று கேட்ட அரசு பஸ் டிரைவர், கண்டக்டர்

கரூர், ஜூலை 7

போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் நேற்று இரவு தனது காரின் மூலமாக அரியலூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது அமைச்சர் சிவசங்கர்கரூர்மாயனூர்இடையே ஒரு உணவகத்தில் காரை நிறுத்தி டீ குடித்தார். அந்த உணவகத்தில் அரசு பஸ்சும் நிறுத்தப்பட்டு இருந்தது. பஸ் டிரைவர், கண்டக்டர் அங்கு சாப்பிட்டு விட்டு வெளியே வந்தனர்.



இதை கவனித்த அமைச்சர் சிவசங்கர் தனியாக சென்று அந்த டிரைவர் கண்டக்டரிடம் பேச்சு கொடுத்தார். அப்போது அவர்களிடம், ''உணவு மற்றும் காபி, டீ ஆகியவற்றை உண்பதற்கு உங்களுக்கென்று குறிப்பிட்ட இடத்தை அரசு ஒதுக்கி இருக்கிறது. அங்கு நிறுத்தாமல் ஏன் இங்கு நிறுத்துகிறீர்கள்? உங்களின் இந்த செயல்பாடுகள் குறித்து முதல்அமைச்சரின் கவனத்துக்கு சென்றால் யார் பதில் சொல்வது?'' என்று கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் பேண்ட், சர்ட்டுடன் பயணியை போல இருந்ததால் அவர்களால் அமைச்சர் சிவசங்கரை சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அப்போது அவர்கள் ஏன் சார் இதெல்லாம் கேட்குறீங்க? என்று அலட்சியமாக பதிலளித்தனர். உடனே அமைச்சர் சிரித்தவாறு, ''நான் யார் என்று உங்களுக்கு தெரிகிறதா?'' என கேட்டார். ''நீங்க யாருன்னு தெரியலையே'' என டிரைவர் கூறினார்.அதற்கு அமைச்சர் சிவசங்கர், '' நான் போக்கு வரத்து துறை அமைச்சர்'' எனகூறியதும் டிரைவர், கண்டக்டர்இருவரும்அதிர்ச்சி அடைந்தனர். ''இனி இதுபோன்று நடக்காமல் உங்களுக்கு உரிய இடங்களில் மட்டும்பஸ்சைநிறுத்தி உணவருந்தி விட்டு எடுத்து செல்லுங்கள்'' என்று அமைச்சர் அறிவுரை வழங்கினார்.




# டேங்கர் லாரி கவிழ்ந்து விபத்து



குன்றத்தூர்: சென்னை எண்ணூரில் இருந்து 12 ஆயிரம் லிட்டர் எரிபொருளுடன் டேங்கர் லாரி ஒன்று நேற்று குன்றத்தூர் அடுத்த காட்டரம்பாக்கம் பகுதியில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு சென்று கொண்டிருந்தது. லாரியை சென்னையை சேர்ந்த ஓட்டுநர் சூர்யா(30) என்பவர் ஓட்டிவந்தார். குன்றத்தூர் – □பெரும்புதூர் பிரதான சாலை சிறுகளத்தூர் அருகே சென்றபோது, டேங்கர் லாரியின் பின் பக்க டயர் வெடித்ததாக கூறப்படுகிறது.

இதனால், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த டேங்கர் லாரி சாலையில் கவிழ்ந்தது. டேங்கர் லாரியில் இருந்து பெட்ரோல், டீசல் கசியத் தொடங்கியது. இதனைக் கண்டு, அதிர்ச்சி அடைந்த வாகன ஓட்டிகள் லாரியில் சிக்கிய ஓட்டுநர் சூர்யாவை மீட்டு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில், பூந்தமல்லி மற்றும் □பெரும்புதூர் பகுதிகளில் இருந்து வந்த தீயணைப்பு வீரர்கள், தீ தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்ணீரை பீய்ச்சி அடித்தனர்.

ராட்சத கிரேன் உதவியுடன் சாலையில் கவிழ்ந்த டேங்கர் லாரியை அகற்றினர். இதனால் அப்பகுதியில் சுமார் 1 மணிநேரம் போக்குவரத்து பாதித்தது. இதுகுறித்து குரோம்பேட்டை போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார், வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# கோயில் காவலாளி இறப்பு வழக்கு டிஎஸ்பி, ஏடிஎஸ்பியிடம் நீதிபதி விசாரணை

திருப்புவனம், ஜூலை 7

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் போலீஸ் விசாரணையின்போது உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, நேற்று டிஎஸ்பி, ஏடிஎஸ்பியிடம் நீதிபதி விசாரணை செய்தார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார் போலீசாரின் விசாரணையில் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பான வழக்கு ஐகோர்ட் மதுரை அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அஜித்குமார் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் 8ம் தேதி அறிக்கையை சமர்பிக்க விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட, மதுரை மாவட்ட 4வது கூடுதல் நீதிமன்ற நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ், கடந்த 2ம் தேதி முதல் விசாரணையை தொடங்கினார். திருப்புவனம் போலீஸ் நிலையம் அருகேயுள்ள நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான ஆய்வு மாளிகை அறையில் விசாரணை நடத்தி வரும் நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ், 2ம் தேதி கொலையான அஜித்குமாருடன் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் பாதுகாவலர்களாக பணிபுரிந்த பிரவீன்குமார், வினோத்குமார், ஆட்டோ ஓட்டுனர் அருண்குமார், பத்ரகாளியம்மன் கோயில் சிசிடிவி கண்காணிப்பு அலுவலர் சீனிவாசன், கோயில் அறநிலையத்துறை அலுவலர் பெரியசாமி, அஜித்குமாரை தாக்கிய சம்பவத்தை வீடியோவில் பதிவு செய்த முக்கிய சாட்சியான சக்தீஸ்வரன், கோயில் அலுவலரான பிரபு, கோயில் உதவி ஆணையரின் ஓட்டுனர் கார்த்திக் ஆகியோரிடம் விசாரணை நடத்தினார்.

தொடர்ந்து அஜித்குமாரின் தாயார் மாலதி, தம்பி நவீன்குமார், சித்திரம்யா, சரவணக்குமார், கோவில் அருகே கடை வைத்துள்ள கீர்த்தி என்ற பெண்ணிடமும் விசாரணை நடைபெற்றது. இதனிடையே 2 நாட்களாக ஏடிஎஸ்பி சுகுமாறன், திருப்புவனம் இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார் ஆகியோரிடமும் விசாரணை நடத்தப்பட்டு வழக்கு தொடர்பாக ஆவணங்களும் பெறப்பட்டன. மேலும் கோயிலில் இருந்த சிசிடிவி கேமராக்களின் டிவிஆர் பதிவுகள் மற்றும் திருப்புவனம் காவல் நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமராக்கள் டிவிஆர் பதிவுகள் வழக்கு தொடர்பான பல்வேறு வீடியோ ஆதாரங்களுக்



கான பென்டிரைவ் உள்ளிட்டவைகளும் நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ந்து 3வது நாளில் அஜித்குமாரை, காவல்துறையினர் ஆட்டோவில் ஏற்றி அனுப்பிய சம்பவத்தின்போது, இருந்த டிரைவரான அய்யனாரிடமும், திருப்புவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயனிடமும் விசாரணையை நடத்தினார். பின்னர் அஜித்குமாரின் உடலை பிரேத பரிசோதனைசெய்த, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர்களான சதாசிவம் மற்றும் ஏஞ்சல் ஆகியோர் அஜித்குமாரின் உடற்கூராய்வு ஆய்வறிக்கை, உடலில் இருந்த காயங்கள், அஜித்குமார் உயிரிழப்பு எப்போது நடைபெற்றது என்பது குறித்தான தகவல்களை விசாரணை நீதிபதியிடம் வாக்குமூலமாக அளித்தனர். 4ம் நாளான நேற்று காலை 7.50 மணிக்கு நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ், திருப்புவனம் காவல் நிலையத்திற்குள் சென்றார். அங்குள்ள போலீசாரிடம் விசாரணை செய்தார். தொடர்ந்து ஏடிஎஸ்பி சுகுமாறன், இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார், எஸ்ஐ சிவப்பிரகாசம், கடந்த 27ம் தேதி காவல் நிலையத்தில் இருந்த பாரா போலீஸ் இளையாராஜா, ஏடிஎஸ்பி சுகுமார், சஸ்பெண்ட் செய்யப்பட்ட டிஎஸ்பி சண்முகசுந்தரம் ஆகியோர் நேற்று விசாரணைக்கு ஆஜராகினர். மதியம் இரண்டு மணி வரை விசாரணை நடந்தது.

★திருப்புவனம்கோர்ட்டில் விசாரணை துவங்கியது

அஜித்குமார் மரணம் சம்பவம் தொடர்பாக திருப்புவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், நீதிபதி வெங்கேடேஷ் பிரசாத்தும் விசாரணையை தொடங்கி உள்ளார். நேற்று மடப்புரம் கோயில் ஊழியர்கள் சக்தீஸ்வரன், பெரியசாமி, கண்ணன், வினோத், பிரபு, கார்த்திக் வேலு, சீனிவாசன் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தினார். போலீசார் தாக்கியதை செல்போனில் படம் பிடித்த சக்தீஸ்வரன் விசாரணைக்கு ஆஜரானார். வரும் நாட்களில் மற்றவர்களிடமும் விசாரணை நடைபெற உள்ளது. அஜித்குமார் வழக்கில் சாட்சிகளின் உண்மைத் தன்மையை அறிய விசாரணை நடத்த ப்படுவதாக கூறப்படுகிறது.

# நடிகர்கள் ஸ்ரீ காந்த், கிருஷ்ணாவை தொடர்ந்து போதைப்பொருள் விவகாரத்தில் மேலும் ஒருவர் கைது



சென்னை, ஜூலை 7

போதைப்பொருள் விவகாரத்தில் நடிகர்கள் ஸ்ரீ காந்த், கிருஷ்ணாவை தொடர்ந்து மேலும் ஒரு நபரை போலீசார் நேற்று கைது செய்தனர். அதிமுக முன்னாள் நிர்வாகி பிரசாத் மற்றும் அவரது கும்பலிடம் இருந்து போதை பொருள் வாங்கி பயன்படுத்திய வழக்கில் நடிகர்கள் ஸ்ரீ காந்த் மற்றும் கிருஷ்ணா ஆகிய இருவரும் நுங்க ம்பாக்கம் போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நடிகர்களுக்கு போதை பொருள் சப்ளை செய்த பிரசாத், பிரதீப் குமார், கானா நாட்டைச் சேர்ந்த ஜான், கெவின் ஆகிய நான்கு பேரையும் போலீசார் காவலில் எடுத்து விசாரணை செய்ய எழும்பூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இதையடுத்து 6 நாட்கள் போலீஸ் காவல் வழங்கி உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் 4 பேரையும் நுங்கம்பாக்கம் காவல் நிலையம் அழைத்து வந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இவர்கள் மூலம் வேறு யாருக்கெல்லாம் போதை பொருள் சப்ளை செய்யப்பட்டுள்ளது, ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள இரண்டு நடிகர்கள் தவிர வேறு யாருக்காவது திரைத்துறையில் இவர்கள் போதைப்பொருள் சப்ளை செய்துள்ளார்களா,

இந்த போதைப்பொருள் கும்பலின் பின்னணி என்ன என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இவர்களுடன் தொடர்புடைய நைஜீரிய நாட்டு நபர்களை நுங்கம்பாக்கம் தனிபடை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். இந்நிலையில் இவர்களிடம் தொடர் விசாரணை மேற்கொண்டதில் தலைமறைவாக இருந்த ராயப்பேட்டையை பகுதியை சேர்ந்த பயாஸ் ஷமேட் (31) என்பவரை போலீசார் நேற்று கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து ஒரு செல்போன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையில் 2,569 பணியிடங்களுக்கு துறை வாரியாக பணி ஒதுக்கீடு

சென்னை, ஜூலை 7

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் 2569 பணியிடங்களுக்கு துறைகள் வாரியாக பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப பணியிடங்களான உதவிபொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர், உதவி பொறியாளர் (திட்டம்), வரைவாளர், பொதுப் பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வாளர், தொழில்நுட்ப உதவியாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய 2569 பணியிடங்களை நிரப்பிட கடந்தாண்டு பிப்ரவரி 2ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது.




தேர்வு பெற்ற தேர்வாளர்களுக்கு நேர்முக தேர்வு நடத்தப்பட்டு, தரவரிசை பட்டியல் தயார் செய்யப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தரவரிசை பட்டியலின் படி, கலந்தாய்வு நடத்தி துறைகள் வாரியாக பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் நேரடி தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் https://tnmaws.ucanapply.com என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

# ரூ.6 லட்சம் கமிஷன்: எஸ்எஸ்ஐ சஸ்பெண்ட்

சேலம், ஜூலை 7

சேலம் மாநகர தலைமையிடத்து துணை கமிஷனர் அலுவலகத்தில் எஸ்எஸ்ஐயாக இருப்பவர் சரவணன், இவர், கட்டப்பஞ்சாயத்து செய்து, ரூ.5 லட்சம் கமிஷனாக பெற்றதாகவும், தனக்கு வரவேண்டிய ரூ.80 லட்சத்தை மோசடி செய்து விட்டதாகவும்

சேலம் கமிஷனர் அலுவலகத்தில் நகை கடைக்காரர் முரளி புகார் செய்தார். மேலும், முரளியிடம் எஸ்எஸ்ஐ சரவணன், நான் காவல்துறையில் 32ஆண்டுகள் வேலை செய்து விட்டேன்.

என் மீது நீங்கள் புகார் கொடுத்தால்சஸ்பெண்ட் செய்வார்கள். 4வது மாதம் நான் பணியில் சேர்ந்து விடுவேன் என கூறிய வீடியோ காட்சிகளையும் முரளி வெளியிட்டார்.

இதையடுத்து எஸ்எஸ்ஐ சரவணனை சஸ்பெண்ட் செய்து கமிஷனர் பிரவீன்குமார் அபினபு நேற்று உத்தரவிட்டார். இந்நிலையில் 3 துணை கமிஷனர் அலுவலகம், 6 உதவி கமிஷனர் அலுவலகத்தில் பணியாற்றும் போலீசாரின்



பின்னணி குறித்தும் கமிஷனர் விசாரணை நடத்தி வருகிறார்.

# அரிவாளுடன் பள்ளிக்கு வந்த மாணவன்



நெல்லை, ஜூலை 7

தென்காசி மாவட்டம், சுரண்டை அடுத்த சேர்ந்தமரம் அருகே அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் மாணவர் ஒருவர் சக மாணவனை தலையில் விளையாட்டுக்குதட்டிஉள்ளார். இதைத்தொடர்ந்து அந்த மாணவன், தலையில் தட்டிய மாணவனை திட்டினார். இருவரையும் சக மாணவர்கள் சமாதானம் செய்தனர்.

பின்னர் மறுநாள் பள்ளிக்கு வந்த மாணவன் புத்தக பையில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து, தலையில் தட்டிய மாணவனிடம் காட்டி மிரட்டியதாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவன், வகுப்பு ஆசிரியரிடம் புகார் கூறினார்.

இதுகுறித்து பள்ளி நிர்வாகம் சார்பில் சேர்ந்தமரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அரசு பள்ளிக்கு வந்த போலீசார், அரிவாள் கொண்டுவந்த மாணவனிடம் விசாரணை நடத்தி எச்சரித்து அனுப்பினர்.

# இளம்பெண்ணுடன் உல்லாசம் ஏமாற்றிய போலீஸ்காரர் கைது

கடலூர், ஜூலை 7

இளம்பெண்ணிடம் உல்லாசமாக இருந்து விட்டு திருமணம் செய்ய மறுத்த போலீஸ்காரர் கைது செய்யப்பட்டார். கடலூர் மாவட்டம் சேடப்பாளையம்அருகே நாகம்மாள்பேட்டையை சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி மகன் சம்பத் (28). இவர் தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் பணியாற்றி வருகிறார். இவர்கடந்தவருடம் திருநெல்வேலியில் பணியாற்றியபோது அங்கு கலெக்டர் அலுவலக தற்காலிக ஊழியராக இருந்த 28 வயது இளம்பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் சம்பத் அந்த பெண்ணை கடலூருக்கு அழைத்து வந்து ஒரு தனியார் லாட்ஜில் அறை எடுத்து தங்கி, ஆசை வார்த்தை கூறி உல்லாசமாக இருந்துள்ளார். இதையடுத்து அந்த பெண் சம்பத்திடம் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். ஆனால் அதற்கு மறுப்பு தெரி



வித்து அவரை ஆபாசமாக திட்டி மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அந்த இளம்பெண், கடலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். இந்த புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க கடலூர் மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார் உத்தரவிட்டார். அதன்படி கடலூர்அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிந்து சம்பத்தை கைது செய்தனர்.

பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கடலூர் சிறையில் அடைத்தனர்.

# காதல் பிரச்னையில் பெண் தற்கொலை அதிமுக மாஜி அமைச்சரின் உறவினர் வெட்டிக் கொலை: சிவகங்கை அருகே பரபரப்பு

சிவகங்கை, ஜூலை 7

காதல் பிரச்னையில் பெண் தற்கொலை செய்ததால் அதிமுக முன்னாள் அமைச்சரின் உறவினர் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். சிவகங்கை அருகே தமறாக்கி கிராமத்தை சேர்ந்த செல்லச்சாமி மகன் மனோஜ்பிரபு(29). தற்போது சிவகங்கை, காமராஜர் காலனியில் வசித்து உள்ளார். இவர், வெளிநாட்டில் பணிபுரிந்து வந்த நிலையில், தற்போது விடுமுறையில் சொந்த ஊர் திரும்பியுள்ளார். நேற்று முன்தினம் இரவு இவர் தனது நண்பர்களான ஹரிகரன், அஜித்குமார் ஆகியோருடன் இடையமேலூர் திருவிழாவிற்கு சென்றுவிட்டு டூவீலரில் சக்கந்திக்கு வந்து கொண்டிருந்தார்.

புதுப்பட்டி அருகே காரில் வந்த மர்ம கும்பல், டூவீலர் மீது மோதி அவரை கீழே தள்ளியது. பின்னர் அக்கும்பல் தப்பி ஓடிய மனோஜ்பிரபுவை விரட்டிச் சென்று சரமாரி வெட்டி கொலை செய்துவிட்டு தப்பியது. தகவலறிந்து சிவகங்கை நகர் போலீசார், மனோஜ்பிரபுவின் உடலை மீட்டு, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், கொலை தொடர்பாக தமறாக்கியை (தெற்கு) சேர்ந்த அபிமன்யு, பூச்சிபிள்ளை, முருகன், மணி, முனீஸ்வரன் மற்றும் பெயர் தெரியாத 4 பேர் உட்பட 9 பேர் மீது வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.



கொலைகுறித்து போலீசார் தெரிவித்ததாவது: மனோஜ்பிரபுவின் தங்கைபுவனேஸ்வரியை அபிமன்யு காதலித்து வந்தார். ஆனால், புவனேஸ்வரிக்கு வேறு மாப்பிள்ளைபார்த்துதிருமண ஏற்பாடு நடந்த நிலையில் அபிமன்யு, காதலிக்கும்போது எடுத்த போட்டோக்களை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இதனால் மனமுடைந்த புவனேஸ்வரி தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவத்தில் இருந்து இருதரப்பிற்கும் தொடர்ந்து முன்விரோதம் இருந்து வந்த நிலையில், அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ஏற்கனவே வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது மனோஜ்பிரபு கொலை நடந்துள்ளது. இவ்வாறு போலீசார் கூறினர். இரு தரப்பினரும் அதிமுக முன்னாள் அமைச்சர் பாஸ்கரனின் நெருங்கிய உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தவாக நிர்வாகி கொலையில் எஸ்ஐக்கு தொடர்பா? தனிப்படை போலீசார் தீவிர விசாரணை

செம்பனார்கோயில், ஜூலை 7

தவாக நிர்வாகி கொலையில் எஸ்ஐக்கு தொடர்பு உள்ளதா? என தனிப்படை போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு மெயின் ரோடு பகுதியை சேர்ந்தவர் மணிமாறன் (32). தவாக காரைக்கால் மாவட்ட செயலாளராக இருந்தார். கடந்த 2021ல் காரைக்கால் மாவட்ட பாமக முன்னாள் செயலாளர் தேவமணி கொலை வழக்கில் முதல் குற்றவாளியான மணிமாறன், 2 ஆண்டுகள் ஜெயிலில் இருந்து ஜாமீனில் வெளிவந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மயிலாடுதுறையில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் நடைபெற்றதவாககூட்டத்தில் மணிமாறன் பங்கேற்றுவிட்டு காரில் திரும்பியபோது, மயிலாடுதுறை அருகே செம்பனார்கோயில் என்ற இடத்தில் 2 கார்களில் பின்தொடர்ந்தவர்கள், திடீரென மணிமாறனை காரில் இருந்து வெளியே இழுத்து தள்ளி சரமாரியாகவெட்டிபடுகொலை செய்தனர். இதுகுறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இதனிடையே படுகொலை செய்யப்பட்ட மணிமாறனின் சகோதரர் காளிதாசன் கொடுத்த புகாரில், 'மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் காவல்நிலையத்தில் பணியாற்றி வரும் எஸ்ஐ, பாமக முன்னாள் செயலாளர் தேவமணியின் உறவினர் ஆவார். அவருக்கு மணிமாறன் படுகொலையில் தொடர்பு இருப்பதாகவும், உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என கூறியுள்ளார்.



இதுதொடர்பாக போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, மணிமாறனை கொலை செய்தவர்களை பிடிப்பதற்கு 5 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 2 நாட்களில் கொலையாளிகளை பிடித்துவிடுவோம். கொலையாளிகள் 4 பேர் என தெரியவந்துள்ளது. அவர்கள் காரைக்கால் வழியாக புதுச்சேரி சென்று இருக்கலாம். அங்கு ஒரு டிஎஸ்பி தலைமையில் போலீசார் விரைந்துள்ளனர். பழிக்கு பழியாகத்தான் இந்த கொலை நடந்திருக்கும். மேலும் தேவமணியின் உறவினரான வைத்தீஸ்வரன்கோவில் காவல்நிலையத்தில் பணியாற்றும் எஸ்ஐ மீது டிஎஸ்பி ஒருவர் தலைமையில் தனிப்படை போலீசார் விசாரணை நடத்த உள்ளனர். அவரை கண்காணிக்கும் பணியில் போலீசார் உள்ளனர் என்றார்.

# சென்னையில் 11 சதவீதம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி பதிவு: டெல்லி, மும்பை, பெங்களூரு உள்பட முக்கிய நகரங்களில் வீடு விற்பனை 20% சரிவு: உள்கட்டமைப்பு மேம்பாடுகளால் சென்னையில் வீட்டு வசதி தேவை அதிகரிப்பு

சென்னை, ஜூலை 7

சென்னையை தவிர முக்கிய நகரங்களில் வீடு விற்பனை 20 சதவீதம் சரிவு கண்டுள்ளது. இந்தியாவின் முக்கிய நகரங்களில் 2025ம் ஆண்டு ஏப்ரல்ஜூன் காலாண்டில் வீடு விற்பனை சுமார் 20 சதவீதம் சரிந்துள்ளது. ஆனால் சென்னை மட்டும் இந்த போக்கை மீறி 11 சதவீதம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்று அனராக் ஆராய்ச்சி அறிக்கை தெரிவிக்கிறது.

அனராக் ஆராய்ச்சியின் படி, 2025ம் ஆண்டு இரண்டாவது காலாண்டில், டெல்லிஎன்.சி.ஆர், மும்பை பெருநகரப் பகுதி, பெங்களூரு, ஐதராபாத், புனே, கொல்கத்தா ஆகிய 7 முக்கிய நகரங்களில் மொத்தம் 96,285 வீடுகள் விற்பனையாகி உள்ளன. இது கடந்த ஆண்டு இதே காலாண்டில் விற்பனையான 1,20,335 யூனிட்களுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதம் குறைவாகும். இந்த சரிவுக்கு முக்கிய காரணங்களாக உயர்ந்து வரும் வீட்டு விலைகள், உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றங்கள் (எ.கா., ஈரான்இஸ்ரேல் மோதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர்) மற்றும் உள்நாட்டு பதற்றங்கள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

இவை வாங்குபவர்களை "காத்திருந்து பார்" மனநிலைக்கு தள்ளியுள்ளன என்று அனராக் குழுமத்தின் தலைவர் அனுஜ் புரி தெரிவித்தார். ஆனால், சென்னை இந்த போக்கை மீறி, 2024ம் ஆண்டு 2ம் காலாண்டில் 5,100 யூனிட்களாக இருந்த விற்பனை, 2025ம் ஆண்டு 2ம் காலாண்டில் 5,660 யூனிட்களாக உயர்ந்து, 11 சதவீதம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. மேலும், காலாண்டு அடிப்படையில் (Q1 2025 உடன் ஒப்பிடுகையில்) சென்னையில் விற்பனை 40 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னையில் உலகளாவிய திறன் மையங்களின் வளர்ச்சி மற்றும் அதனால் உருவாகிய வீட்டு வசதி தேவை குறிப்பிடப்படுகிறது.

சென்னையில் வீடு விற்பனை உயர்வுக்கு முக்கிய காரணமாக, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் விரிவாக்கம் உள்ளன. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டம், சென்னை பெங்களூரு தொழில் துறை வழித்தடம் மற்றும் பல்வேறு சாலை விரிவாக்கத் திட்டங்கள் ஆகியவை நகரின் இணைப்பை மேம்படுத்தி, வீட்டு வசதி தேவையை அதிகரித்துள்ளன. மேலும், சென்னையில் உள்ள தகவல் தொழில்நுட்பம், நிதி, மனிதவளம் மற்றும் பகுப்பாய்வு போன்ற சேவைகளை வழங்குவதற்காக பன்னாட்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்டவை.

இவை வேலைவாய்ப்புகளை உருவாக்கி, வீட்டு வசதி தேவையை அதிகரித்துள்ளன. 2025ம் ஆண்டு 2ம் காலாண்டில், சென்னையில் சுமார் 8,525 வீட்டு யூனிட்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன, இது Q1 2025 உடன் ஒப்பிடுகையில் 79 சதவீதம் அதிகரிப்பு மற்றும் ஆண்டுக்கு ஆண்டு 65 சதவீதம் வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்த புதிய யூனிட்களில் 79 சதவீதம் மத்திய மற்றும் பிரீமியம் பிரிவுகளில் (ரூ.40 லட்சம் முதல் ரூ.1.5 கோடி வரை) உள்ளன, இது சென்னையில் உயர்ந்து வரும் நடுத்தர மற்றும் உயர் வர்க்க மக்களின் தேவையை பிரதிபலிக்கிறது.

சென்னை தவிர, மற்ற முக்கிய நகரங்களான மும்பை (25% சரிவு), புனே (27% சரிவு), ஐதராபாத் (27% சரிவு), கொல்கத்தா (10% சரிவு) ஆகியவை குறிப்பிடத்தக்க விற்பனை சரிவை சந்தித்துள்ளன. இந்த நகரங்களில், உயர்ந்த விலைகள் மற்றும் புதிய வீட்டு யூனிட்களின் குறைவு ஆகியவை முக்கிய காரணங்களாக உள்ளன. மும்பையில், 2025ம் ஆண்டு முதல் அரை ஆண்டில் விற்பனை 34% குறைந்து 62,890 யூனிட்களாக உள்ளது. பெங்களூரு மற்றும் ஐதராபாத் ஆகியவை முறையே 3% மற்றும் 3% வளர்ச்சியைப் பதிவு செய்தாலும், மொத்த விற்பனை அளவு சென்னையை விட குறைவாகவே உள்ளது.

சென்னையின் ரியல் எஸ்டேட் சந்தை 2025 26ல் 57% விலைஉயர்வை எதிர்பார்க்கிறது, இது உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியால் உந்தப்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் ரெப்போவிகித குறைப்பு மற்றும் உள்நாட்டு பதற்றங்கள் தணிவது ஆகியவை வீடு வாங்குபவர்களின் நம்பிக்கையை மேம்படுத்தி, எதிர்காலத்தில் விற்பனையை மேலும் உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையின் ரியல் எஸ்டேட் சந்தையானது, மற்ற முக்கிய நகரங்களில் விற்பனை சரிவை சந்திக்கும் போது, தனித்துவமான வளர்ச்சியைப் பதிவு செய்து, நிலையான வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

# வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகளுக்கு லைசென்ஸ் கட்டாயம்: சென்னை ஐகோர்ட் அதிரடி உத்தரவு




சென்னை, ஜூலை 7

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகளுக்கு லைசென்ஸ் கட்டாயம் வாங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சிங்கப்பூரை சேர்ந்த லியுங் காய் பூக் மெடிக்கல் கம்பெனி கோடாலி தைலத்தை தயாரித்து வருகிறது. இந்த தைலத்தை சென்னை மந்தைவெளியை சேர்ந்த ஆக்சென் மார்க்கெட்டிங் இண்டியா நிறுவனம் இறக்குமதி செய்து இந்தியாவில் விற்பனை செய்து வருகிறது.

இதற்கு லைசென்ஸ் பெற வேண்டும் என்று ஆக்சென் நிறுவனத்திற்கு அரும்பாக்கத்தில் உள்ள மாநில லைசென்ஸ் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. தைலத்தையும் சுங்க அதிகாரிகள் முடக்கி வைத்தனர். இதையடுத்து, ஆக்சென் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் சார்பில் கோடாலி தைலம் இறக்குமதி செய்வதற்கு லைசென்ஸ் தேவையில்லை என்று வாதிடப்பட்டது.

ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், ஒன்றிய அரசு வழக்கறிஞர் வி.சந்திரசேகரன் ஆகியோர் மருந்து மற்றும் ஒப்பனை பொருட்கள் சட்டம் பிரிவு 3(பி)ன்படி ஆயுர்வேத மருந்து பொருட்களும் இந்த சட்டத்தின்கீழ் வரும். இந்தியாவில் தயாரிக்கப்படும் ஆயுர்வேத மருந்து பொருட்களுக்கு லைசென்ஸ் வேண்டும் என்பது குறித்து தனியாக எந்த விதிகளும் வகுக்கப்படவில்லை. ஆனால், வெளிநாடுகளில் இருந்து லைசென்ஸ் இல்லாமல் ஆயுர்வேத மருந்துபொருட்களை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, உச்ச நீதிமன்ற எஸ்எம்ஏ டிரேடிங் நிறுவன வழக்கில் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் கோடாலி தைலம் சுங்க கட்டண வரம்புக்குள் வருகிறது. எனவே, இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகள் சோதனைக்கு உட்பட்டதுதான். மருந்து மற்றும் ஒப்பனை பொருட்கள் சட்டம் ஆயுர்வேத பொருட்களுக்கும் பொருந்தும். இந்த சட்டத்தின்கீழ் ஆயுர்வேத மருந்து பொருட்களையும் ஒழுங்குபடுத்த முடியும்.

அனைத்து மருந்து பொருட்களுக்கும் இறக்குமதி லைசென்ஸ் பெற வேண்டும் என்பதுதான் நாடாளுமன்றத்தின் நோக்கம். இந்த வழக்கிலும் அதற்கான முகாந்திரம் உள்ளது. மருந்து மற்றும் ஒப்பனை பொருட்கள் சட்டத்தின் விதிகளின் கீழ் விண்ணப்பித்தால் லைசென்ஸ் வழங்கப்பட வேண்டும். மத்திய மருந்து தரக்கட்டுப்பாடு அமைப்பின் வழிகாட்டு விதிகளின்படி தடையில்லாசான்று வழங்குவதற்கு முன்பு அந்த மருந்து பொருள் சோதிக்கப்பட வேண்டும்.

மருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதில் பொதுநலன், பொது சுகாதாரம் முக்கியமானது. ஆங்கில மருந்தில்லாத மருந்துகளும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். எனவே, விதிகளை வகுக்கும் அதிகாரிகள் ஆயுர்வேத மருந்துகளுக்கு லைசென்ஸ் பெறுவதற்கு விண்ணப்பம் தொடர்பாக பழைய விதிகளில் மாற்றம் கொண்டுவர வேண்டும். மனுதாரரின் சரக்கை பொறுத்தவரை மாநில லைசென்ஸ் அதிகாரியின் மேற்பார்வையில் மத்திய மருந்து தரக்கட்டுப்பாடு அமைப்பின் அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்தில் கோடாலி தைலத்தின் மாதிரி ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆய்வில் திருப்தியிருந்தால் சான்றளிக்க வேண்டும். அதன் அடிப்படையில் சுங்க அதிகாரிகள் சரக்கை விடுவிக்க வேண்டும். இந்த வழக்கு முடித்து வைக்கப்படுகிறது என்று உத்தரவிட்டார்.

# அரசு மருத்துவ கல்லூரிகளுக்கான முதல்வர் பதவி பதவி உயர்வு பட்டியலை தயாரித்து 4 வாரங்களில் நியமிக்க வேண்டும்: தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 7

அரசு மருத்துவக் கல்லூரிகளில் முதல்வர் பதவிக்கு தகுதியானவர்கள் எனக்கூறி 26 பேராசிரியர்களின் பதவி உயர்வு பட்டியலை தயாரித்த தமிழக அரசு இது சம்பந்தமாக ஆட்சேபனைகளை கோரியது. ஆட்சேபனைகள் தெரிவிக்கும் முன்பே 14 பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கி முதல்வர்களாக நியமித்து 2024 அக்டோபர் 3ம் தேதி அரசு உத்தரவிட்டது. இதை எதிர்த்து, பேராசிரியர் மனோன் மணி உள்பட 4 பேர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்ற தனி நீதிபதி, 14 அரசு மருத்துவ கல்லூரி முதல்வர்கள் நியமனத்தை ரத்து செய்து உத்தரவிட்டார். பணி மூப்பு அடிப்படையில் மனுதாரர்களை பதவி உயர்வு பட்டியலில் சேர்த்து 4 வாரங்களில் மருத்துவ கல்லூரி முதல்வர்களாக நியமிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.



இதை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்குகள் நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், கே. சுரேந்தர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. தனிநீதிபதி 14 டீன் நியமன உத்தரவை ரத்து செய்தது சரியே என்று எதிர் மனுதாரர்கள் சார்பில் மூத்த வக்கீல் ஐசக் மோகன் லால் வாதாடினார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், மருத்துவ கல்லூரி முதல்வர்களாக பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக ஆட்சேபனைதெரிவிக்க 2 மாதங்கள் அவகாசம் வழங்கிய நிலையில், 2 நாளில் நியமன உத்தரவு பிறப்பித்ததை ஏற்க முடியாது. தனி நீதிபதி உத்தரவில் தலையிட எந்த காரணமும் இல்லை. மேல் முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தமிழக அரசு 4 வாரங்களில் அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு முதல்வர் பதவி உயர்வுக்கான பட்டியலை தயாரித்து நியமனம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

# காங்கிரசின் வரலாறு தெரியாமல் பேசுகிறார் வன்னியரசு: இளைஞர் காங். தலைவர் லெனின் பிரசாத் கண்டனம்



சென்னை, ஜூலை 7

தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் லெனின் பிரசாத் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சமீபத்தில் நடந்த ஒரு அரசியல் விவாதத்தில் கலந்து கொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி வன்னியரசு, தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி பலவீனமாக இருப்பதாக கூறியிருக்கிறார். அவரது பேச்சு அவரது அரசியல் அறியாமையை காட்டுகிறது. இந்திய தேசிய காங்கிரஸ் என்பது ஒரு சாதாரண கட்சி அல்ல. சுதந்திர போராட்டத்தையும், இந்திய அரசியலமைப்பையும் நாட்டின் பல முக்கியமான சமூக நலத்திட்டங்களையும் உருவாக்கிய வரலாற்றுப்பூர்வமான மிக பெரிய இயக்கம்.

இத்தகைய கட்சியை விமர்சிக்க, வன்னியரசுக்கு என்ன தகுதி இருக்கிறது?. காங்கிரசின் வரலாற்றையும், அதன் தாக்கத்தையும் அறியாமலேயே பொது நிகழ்வுகளில் இவ்வாறான விமர்சனங்களை செய்யும் இவர், தரமற்ற அரசியலை கடைபிடிக்கிறார் என்பது நிரூபணமாகிறது. காங்கிரசின் வரலாற்றையும், தமிழக இளைஞர்களிடையே அது விதைத்துள்ள நம்பிக்கையையும் மதிக்காத வகையில் பேசுவது எந்தவிதமான அரசியல் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பாஜ, திமுகவுடன் கூட்டணி இல்லை என்றால் விஜய்யின் கொள்கை எதிரி பட்டியலில் அதிமுக இருக்கிறதா, இல்லையா? திருமாவளவன் கேள்வி



சென்னை, ஜூலை 7

சென்னை விமான நிலையத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: தவெக தலைவர் விஜய், தமிழகத்தில் மாற்று சக்தியாக வரவேண்டும் என்று நினைத்து, பாஜ, திமுகவுடன் கூட்டணி இல்லை என கூறியுள்ளார் என்று நம்புகிறேன். ஆனால் அவர் அதிமுகவை பற்றி வெளிப்படையாக எதுவும் பேசவில்லை. அவரின் கொள்கை எதிரி பட்டியலில், அதிமுக இருக்கிறதா, இல்லையா என்று அவர் உரையில் புரிந்துகொள்ள முடியவில்லை. திமுக ஆளும் கட்சி என்பதால், அதை எதிர்ப்பது இயல்பான ஒன்று. ஆளுங்கட்சியை எதிர்த்து தான் அரசியல் செய்ய முடியும் என்பது, வாடிக்கையான ஒன்று தான். தவெக தலைவர் விஜய் சொல்லி இருப்பதும், இயல்பான ஒன்று தான். ொள்கை எதிரி, அரசியலில் எதிராக, திமுக, பாஜவை தான், விஜய் வெளிப்படையாக கூறினார். அதிமுகவை அவர் விமர்சித்தாரே தவிர, கொள்கை எதிரிகள் பட்டியலில், அதிமுக இருக்கிறது என்று அவர் சொல்லவில்லை. அவர் தமிழகத்தில் மாற்று சக்தியாக வரவேண்டும் என்று எண்ணி, இந்த கருத்தை சொல்லி உள்ளார். பரந்தூர் விமான நிலைய விவகாரத்தில் தவெக தலைவர் விஜய் போராட்டம் பாதிக்கப்படும் மக்களுக்கு, நீதி பெற்று தருமானால், குடியிருப்புகளை அகற்றவிடாமல் தடுக்குமானால், அது வரவேற்கத்தக்கது.

# தமிழ்நாட்டில் பெண் காவலர்கள் மற்ற பாதுகாப்பு பணிகளுக்காக அழைத்துச் செல்லப்படுவதில்லை: தேவைக்கு மட்டுமே நியமனம்; டிஜிபி சங்கர் ஜிவால் விளக்கம்



சென்னை, ஜூலை 7

தமிழ்நாடு டிஜிபி சங்கர் ஜிவால் வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த 30.6.2025 அன்று காணொலி வாயிலாக மாவட்ட மற்றும் மாநகர காவல் அதிகாரிகளுடன் நடந்த கலந்தாய்வின் போது காவல்துறை கூடுதல் இயக்குநர், சட்டம் – ஒழுங்கு டேவிட்சன் ஆசிர்வாதம், பாதுகாப்பு பணிகளுக்கு அதிக பெண் காவலர்களை பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தி இருந்தார். போக்சோ குற்றங்கள் மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பிற குற்றங்களில் விரைவாக விசாரணை நடத்தி வழக்குகளை விரைந்து முடிக்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றமுக்கியதேவையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆலோசனை வழங்கப்பட்டது.

சட்ட விதிகளின்படி, போக்சோ வழக்குகளில் 60 நாட்களுக்குள் இறுதி அறிக்கைகளை தாக்கல் செய்வது கட்டாயமாகும். இதுபோன்ற வழக்குகளில் நிலுவையில் உள்ள வழக்குகள் மீது உடனடி கவனம் தேவை, என்பதை மனதில் கொண்டு, பாதுகாப்பு பணிகளுக்கு பெண் காவலர்களை அதிகமாக நியமிக்க வேண்டாம் என்று அத்தகைய ஆலோசனை வழங்கப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான முக்கியமான வழக்குகளைவிசாரிப்பதிலும், வாக்குமூலங்களைபதிவு செய்வதிலும் இன்றியமையாத பங்கு வகிக்கும் பெண் காவலர்களை தேவையின்றி திசைதிருப்பக்கூடாது என்பதை உறுதி செய்வதே இந்த அறிவுறுத்தலின் முதன்மை நோக்கமாகும்.

காவல் துறையில் பெண் காவலர்களை பணியமர்த்துவதில் முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில் பெண் காவலர்கள் காவல்துறையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளனர் என்பதும் அவர்கள் காவல் துறை பணியை நிறைவேற்றுவதில் முக்கிய பங்காற்றுகிறார்கள் என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள், முக்கிய பிரமுகர்களின் வருகை போன்ற பாதுகாப்பு பணிகளில் பெண்களின் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற முக்கிய பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சட்ட விதிகளின்படி, பெண் குற்றவாளிகளைக் கைது செய்தல், குற்றம் சாட்டப்பட்ட பெண்கள் அல்லது பெண் சாட்சிகளின் வாக்குமூலங்களை விசாரித்து பதிவு செய்தல், பாதுகாப்பு பணிகளில் பெண்களின் கூட்டத்தைக் கையாளுதல் போன்ற சில பணிகளை பெண் காவலர்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் அன்றாட பணிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான மனுக்கள் மற்றும் வழக்குகளைக் கையாள அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் பெண் காவலர்கள் மட்டுமே பணியமர்த்தப்படுவதால், அவர்கள் வழக்கமான முறையில் மற்ற பாதுகாப்பு பணிகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதில்லை, மேலும் தேவைப்படும்போது மட்டுமே பாதுகாப்பு பணிக்கு நியமிக்கப்படுகிறார்கள். காவல் பணிகளில் பெண் காவலர்களின் பயன்பாடு குறித்து காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்–ஒழுங்கு) வழங்கிய அறிவுரைகளை இந்த சூழலில் பார்க்க வேண்டப்படுகிறது.

# இரு சமூகங்களுக்கிடையே மோதல் புகார் மீண்டும் ஆஜராகாத மதுரை ஆதீனம்: வயதாகிவிட்டதால் காணொலி மூலம் ஆஜராவதாக கோரிக்கை



சென்னை, ஜூலை 7

நேரில் ஆஜராகாமல், விசாரணைக்கு காணொலி வாயிலாக ஆஜராவதாக மதுரை ஆதீனம் கோரிக்கை விடுத்துள்ளார். சென்னை அடுத்த காட்டாங்கொளத்தூரில் நடந்த சைவ சித்தாந்த மாநாட்டில் பங்கேற்க கடந்த மே 2ம் தேதி காலை மதுரை ஆதீனம் வந்த போது உளுந்தூர் பேட்டை பகுதியில் அவரது கார் மீது மற்றொரு கார் மோதி விபத்து ஏற்படுத்த முயன்றதாக புகார் எழுந்தது. மேலும், மாநாட்டில்பேசிய மதுரை ஆதீனம் தன்னை கொலை செய்ய சதி நடந்ததாகவும், இதில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கலாம் என்றும் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது, விபத்து ஏற்படுத்தியவர்கள் தாடி வைத்திருந்ததாகவும் குல்லா அணிந்திருந்ததாகவும் புகார் தெரிவித்தார். நீண்ட தொலைவு துரத்தி வந்து சாலை தடுப்புகளை உடைத்து தங்கள் கார் மீது மோதியதாகவும் குற்றம்சாட்டினார். மதுரை ஆதீனத்தின் புகாரை தொடர்ந்து சம்பவ இடத்தில் பதிவான சிசிடிவி காட்சிகளை காவல்துறை வெளியிட்டது. அதில் திருச்சிசென்னை நெடுஞ்சாலையில் மதுரை ஆதீனத்தின் கார் அதிவேகமாக செல்வதும் இடதுபுறத்தில் இருந்து மற்றொரு கார் கட்டுப்பாடான வேகத்தில் வந்து கொண்டிருந்ததும் பதிவாகி இருந்தது. மேலும் கட்டுப்பாடான வேகத்தில் வந்த காரை மதுரை ஆதீனத்தின் கார் அதிவேகமாக கடப்பதும் இதையடுத்து கட்டுப்பாடான வேகத்தில் வந்த கார் பிரேக் போடப்பட்டு விபத்து தவிர்க்கப்பட்டதும் அம்பலமானது. உண்மை வெளிவந்த நிலையில் ராஜேந்திரன் என்பவர் சென்னை காவல் ஆணையரிடம் புகார் ஒன்றை அளித்தார். அதில், மதுரை ஆதீனத்தின் கருத்துகள் மாற்று மதத்தினரின் உணர்வுகளை புண்படுத்துவதோடு சைவ சமயத்தினரின் உணர்வுகளையும் தூண்டும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்து இருந்தார்.

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்கத்தோடு உண்மைக்கு புறம்பான தகவல்களை மதுரை ஆதீனம் தொடர்ந்து பரப்பி வருவதாகவும் புகாரில் குற்றம்சாட்டி இருந்தார். இரு மதத்தினரிடையே கலவரத்தை தூண்டும் வகையிலும் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும் மதுரை ஆதீனத்தின் கருத்துகள் உள்ளதால் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த புகார் குறித்து விசாரித்த சென்னை கிழக்கு மண்டல சைபர்க்ரைம் போலீசார் கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் பேசுதல், இரு சமூகங்களுக்கு இடையே பகைமையை உருவாக்கும் வகையில் செயல்படுதல், பொது தீமைக்கு வழிவகுக்கும் வகையில் தவறான தகவல்களை பரப்புதல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் மதுரை ஆதீனம் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இதனை தொடர்ந்து ஜூன் 29ம் தேதி விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பிய நிலையில் மதுரை ஆதீனம் ஆஜராகவில்லை. இதனால் கடந்த வாரம் மீண்டும் ஜூலை 5ம் தேதி விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டது. ஆனாலும் அவர் ஆஜராகவில்லை. 2 முறை சம்மன் அனுப்பப்பட்ட பிறகும் ஆஜராகவில்லை என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டி ருந்தது. இந்த சூழலில் முதுமை, உடல்நிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டி காணொலி மூலம் விசாரணைக்கு ஆஜராக தயாராக இருப்பதாக மதுரை ஆதீனம் காவல் துறைக்கு கடிதம் அனுப்பினார். அதனை காவலர்கள் ஏற்க மறுத்த நிலையில், மதுரை ஆதீனம் நேரில் ஆஜராகவில்லை என்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்டது. இருப்பினும் அவர் நேற்று ஆஜராகாத நிலையில், அவருடைய வழக்கறிஞர் சேதுபதி, சென்னை சேத்துப்பட்டில் உள்ள சைபர் க்ரைம் அலுவலகத்தில் ஆஜரானார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

7.7.2025

# திருச்செந்தூரில் நாளை குடமுழுக்கு: பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் குவிந்தனர்



திருச்செந்தூர், ஜூலை 7

முருகப்பெருமானின் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் குடமுழுக்கு நாளை (7ம் தேதி) காலை 6.15மணிக்குமேல் 6.50மணிக்குள் கோலாகலமாக நடக்கிறது. இதை முன்னிட்டு சுவாமி சண்முகருக்கு ராஜகோபுர வாசல் அருகில் 8 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்டமாக யாகசாலை அமைக்கப்பட்டு சுவாமி சண்முகருக்கு 49, ஜெயந்திநாதர் 5, நடராஜர் 5, பெருமாள் 5 மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கு 12 என மொத்தம் 76 குண்டங்களில் சுமார் 400 கும்பங்கள் வைக்கப்பட்டு காலை, மாலை வேளைகளில் பூஜைகள் நடைபெறுகிறது.

இதையொட்டி, கடந்த 1ம் தேதி மாலை முதல் யாகசாலை பூஜைகள் துவங்கி காலை, மாலை வேளைகளில் பூஜைகள் நடந்து வருகின்றன. நேற்று காலை 8வது கால யாக சாலை பூஜையும், மாலை 9வது கால யாக சாலை பூஜையும் விமரிசையாக நடந்தது. இதையொட்டி கோயில் சண்முக விலாச மண்டபத்தில் இருந்து ஆச்சார்ய விசேஷசந்திபூஜைகள்நடந்தன. தொடர்ந்து ஆச்சாரியார்கள் மேளதாளங்கள் முழங்க யாகசாலைக்கு அழைத்து வரப்பட்டனர். பின்னர் யாகசாலையில் பூஜைகள் தொடங்கியது. அங்கு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

யாகசாலை வழிபாட்டில், வேத பாராயணம், திருமுறை விண்ணப்பம் மற்றும் நாதசுர இன்னிசையும், பெண் ஓதுவார்கள் உள்ளிட்ட 108ஓதுவார்மூர்த்திகளைக்கொண்டு பக்க வாத்தியங்களுடன் பன்னிரு திருமுறைகள், திருப்புகழ் மற்றும் கந்தர் அனுபூதி முதலான செந்தமிழ் வேதங்கள் முற்றோதுதல் நடந்தது. சிகர நிகழ்ச்சியாக நாளை (ஜூலை 7ம் தேதி) காலை 6.15 மணி முதல் 6.50 மணி குடமுழுக்கு நன்னீராட்டு தமிழிலும் நடைபெற உள்ளது. இதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தற்போதே திருச்செந்தூரில் குவிந்த வண்ணம் உள்ளனர். இதற்காக 600 சிறப்பு பஸ்கள், சென்னையில் இருந்து சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. கும்பாபிஷேக விழாவிற்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 6 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

# பட்டாசு பலி 10 ஆக உயர்வு



சாத்தூர், ஜூலை 7

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே சின்னக்காமன்பட்டியில் கமல்குமார் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலையில் கடந்த ஜூலை 1ம் தேதி பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இதில், 8 பேர் உடல் கருகி பலியாகினர். விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த லிங்கசாமி, இரு தினங்களுக்கு முன்னர் இறந்தார். இந்நிலையில் மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அழகுராஜா நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

# ஒரே ஆண்டில் 2வது முறையாக நிரம்பிய மேட்டூர் அணை

சேலம், ஜூலை 7

ஒரே ஆண்டில் 2வது முறையாக மேட்டூர் அணை நிரம்பியது. கடந்த ஜூன் 29ல் மேட்டூர் அணை அதன் மொத்தஉயரமான120அடியைஎட்டியது.நீர்வெளியேற்றம் காரணமாக நீர்மட்டம் சரியத் தொடங்கிய நிலையில், தற்போது மீண்டும் 120 அடியை எட்டியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (7.7.2025)

மேஷம்: எதிர்பாராததனமை!முயற்சிகளில் வெற்றி. பணம்: முன்னேற்றம் காணப்படும். உத்தியோகம்: உயர்ந்த பதவி வாய்ப்பு.

ரிஷபம்: குடும்பத்தில் சுமூக நிலை. சுபநிகழ்ச்சி திட்டம். பணம்: செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. உத்தியோகம்: வேலை மாறுதல் சாத்தியம்.

மிதுனம்: புதிய உறவுகள் உருவாகும். நல்ல செய்தி. பணம்: வங்கி விவகாரங்களில் முன்னேற்றம். உத்தியோகம்: உயரதிகாரிகளின் அனுகூலம்.

கடகம்: உடல்நலம் கவனிக்க வேண்டியது அவசியம். பணம்: வீண்செலவுகள் ஏற்படும். உத்தியோகம்: வேலைப்பளு அதிகரிக்கும்.

சிம்மம்: நினைத்தது நிறைவேறும் நாள். பணம்: எதிர்பாராத வருமானம். உத்தியோகம்: பதவி உயர்வு சாத்தியம்.

கன்னி: மன உற்சாகம் கூடும். நண்பர்களிடம் ஆதரவு. பணம்: சேமிக்க முயற்சி செய்யவும். உத்தியோகம்: புதிய வாய்ப்பு வருகிறது.

துலாம்: குடும்பத்தில் மகிழ்ச்சி. பழைய சிக்கல் தீரும். பணம்: நிதிநிலை மேம்படும். உத்தியோகம்: முயற்சிக்கு வெற்றி.

விருச்சிகம்: சிக்கல்கள் விலகும். உயர்வுக்கு வாய்ப்பு. பணம்: கடனில் இருந்து வெளியே வரும் நாள். உத்தியோகம்: முக்கிய பொறுப்பு உண்டு. பரிகாரம்: சனிபகவனை அர்ச்சிக்கவும்.

தனுசு: வெளிநாட்டு பயணம் சாத்தியம். பணம்: லாபகரமான நிலை. உத்தியோகம்: உயர்நிலை அதிகாரிகளிடம் நல்ல மதிப்பு.

மகரம்: பொறுமை தேவைப்படும் நாள். பணம்: நிதி நிலை சீராகும். உத்தியோகம்: பழைய வேலை தொடர்பான சிக்கல் தீரும்.

கும்பம்: புதிய முயற்சியில் வெற்றி. நண்பர்களிடம் உதவி. பணம்: எதிர்பாராத ஆதாயம். உத்தியோகம்: பதவி உயர்வு வாய்ப்பு.

மீனம்: தடைபட்ட காரியம் இன்று நிறைவேறும். பணம்: சேமிப்பில் லாபம். உத்தியோகம்: புதிய திட்டம் தொடங்க நல்ல நாள்.

# கோவை அருகே நடுரோட்டில் தீப்பற்றி எரிந்த கார்



கோவை, ஜூலை7

கோவை மேட்டுப்பாளையம் சாலை சாயிபாபா காலனி பகுதியில் கடந்த சில மாதங்களாக மேம்பால பணிகள் நடந்து வருகிறது. இதனால், அந்த சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், சாய்பாபா காலனி அடுத்த கவுண்டம்பாளையம் எருகம்பெனி பாலம் அருகே இன்று காலை நல்லாம்பாளையம் ராமசாமி நகரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசு போக்குவரத்துக் கழக நடத்துனர் ஜோதிராஜ் என்பவர் தனது காரில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரது காரில் இருந்து பெட்ரோல் கசிந்ததால், சாலையில் சென்ற மற்ற வாகன ஓட்டிகள் அவரிடம் பெட்ரோல் கசிவதாக கூறியுள்ளனர். இதனை அவர் பெட்ரோல் தீர்ந்துவிட்டது என்று எண்ணி காஸ் இணைப்புக்கு மாற்றியுள்ளார். அடுத்த சில நிமிடத்தில் திடீரென காரின் முன் பகுதியில் தீப்பிடித்துள்ளது. இதை கண்டு அதிர்ச்சி அடைந்த ஜோதிராஜ் உடனடியாக காரை நிறுத்தி கீழே இறங்கியுள்ளார். அதன் பின்னர் கார் மளமளவென தீப்பிடித்து எரியத் துவங்கியது.

இது குறித்து கவுண்டம்பாளையம் தீயணைப்பு துறையினருக்கு அளித்த தகவலின் பேரில், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு துறையினர் தீயை அணைத்தனர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இந்த தீ விபத்தில் கார் எரிந்து சேதமடைந்தது. இதைத்தொடர்ந்து அங்கு வந்த கவுண்டம்பாளையம் போலீசார் சம்பவம் குறித்து வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# ஓடும் ரெயிலில் பெண்ணிடம் பாலியல் அத்துமீறல்; டிக்கெட் பரிசோதகர் கைது

திருப்பூர், ஜூலை 7

சென்னையில் இருந்து மங்களூருக்கு வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயில் கடந்த 3ந்தேதி புறப்பட்டது. இந்த ரெயிலில் திருப்பூர் முருகம்பாளையத்தை சேர்ந்த 34 வயது பெண் மற்றும் அவரது கணவர் முறப்பூரில் இருந்து முன்பதிவு செய்யபடாத டிக்கெட் எடுத்துள்ளனர். அப்போது அவசரத்தில் குளிர்சாதன பெட்டியில் ஏறியுள்ளனர்.

இந்த ரெயிலில் டிக்கெட் பரிசோதகராக வேலூர் மாவட்டம் புளியமங்கலம் பகுதியை சேர்ந்த பாரதி(வயது 50) என்பவர் இருந்துள்ளார். அப்போது அவர், அவர்களிடம் டிக்கெட் கேட்டுள்ளார். அவர்கள் முன்பதிவு செய்யப்படாத டிக்கெட் எடுத்துவிட்டு, குளிர்சாதன பெட்டியில் ஏறியதால் அவர்களை தனியாக மற்றொரு பெட்டிக்கு அழைத்து சென்றுள்ளார்.

மேலும், கணவரை ஒரு பெட்டியில் இருக்க வைத்து விட்டு, அந்த பெண்ணை மற்றொரு பெட்டிக்கு அழைத்து சென்றுபாலியல்அத்துமீறலில்ஈடுபட்டுள்ளார். தொடர்ந்து அவர்கள் திருப்பூர் வந்து இறங்கவும் ரெயில்வே போலீசாரிடம் புகார் அளித்தனர். இதுகுறித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த திருப்பூர் ரெயில்வே போலீசார் அந்த பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட டிக்கெட் பரிசோதகர் பாரதியை கைது செய்தனர்.

# வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகளுக்கு கட்டாயம் உரிமம் பெற வேண்டும்: ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஜூலை 7

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகளுக்கு உரிமம் கட்டாயம் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சிங்கப்பூரை சேர்ந்த லியுங் காய் பூக் மெடிக்கல் கம்பெனி கோடாரி தைலத்தை தயாரித்து வருகிறது. இந்த தைலத்தை சென்னை மந்தைவெளியை சேர்ந்த ஆக்சென் மார்கெட்டிங் இந்தியா நிறுவனம் இறக்குமதிசெய்துஇந்தியாவில்விற்பனை செய்து வருகிறது.

இந்நிலையில், இறக்குமதி செய்யப்படும் கோடாலி தைலத்திற்கு உரிமம் பெற வேண்டும் என்று ஆக்சென் நிறுவனத்திற்கு அரும்பாக்கத்தில் உள்ள மாநில ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. மேலும், சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோடாரி தைலத்தையும் சுங்க அதிகாரிகள் முடக்கிவைத்தனர். இதையடுத்து, இறக்குமதி செய்த சரக்கை விடுவிக்க கோரி ஆக்சென் நிறுவனம், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி, உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், கோடாரி தைலம் சுங்க கட்டண வரம்புக்குள் வருவதால், இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகள் சோதனைக்கு உட்பட்டதுதான். மருந்து மற்றும் ஒப்பனை பொருட்கள் சட்டம் ஆயுர்வேத பொருட்களுக்கும் பொருந்தும் என தெரிவித்து, அனைத்து மருந்து பொருட்களுக்கும் இறக்குமதி உரிமம் பெற வேண்டும் என உத்தரவிட்டார். மேலும், ஆயுர்வேத மருந்துகளுக்கு லைசென்ஸ் பெறுவதற்கு விண்ணப்பிப்பது தொடர்பான பழைய விதிகளில் மாற்றம் கொண்டு வர வேண்டும் எனத் தெரிவித்த நீதிபதி, ஆக்சென் நிறுவனத்தின் பொருட்களை ஆய்வு செய்து விடுவிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

# கிச்சா நடிக்கும் கே47 படத்தின் மோஷன் போஸ்டர் வெளியீடு




கன்னட திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் கிச்சா சுதீப். இவர் நான் ஈ, அருந்ததி, புலி ஆகிய திரைப்படங்களில் வில்லனாக நடித்து தமிழ் மக்களின் மனதில் பதிந்தார். இவரது நடிப்பில் கடைசியாக வெளியான மேக்ஸ் திரைப்படம் மிகப்பெரிய வரவேற்பைபெற்றது. இப்படத்தைவிஜய்கார்த்திகேயாஇயக்கினார்.

இந்நிலையில் கிச்சா மீண்டும் விஜய் கார்த்திகேயா இயக்கத்தில் அடுத்த திரைப்படத்தில் நடிக்கிறார். இப்படம் கிச்சா சுதீப்பின் 47 வது திரைப்படமாகும். இப்படம் தற்பொழுது 'கே47' என தற்காலிகமாக அழைக்கப்படுகிறது. படப்பிடிப்பு பணிகள் வரும் 7ம் தேதி தொடங்க இருக்கிறது. இதனைபடக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்துள்ளனர். இப்படத்தை சத்ய ஜோதி நிறுவனம் தயாரிக்கிறது.

# துஷ்யந்த் ஜெயபிரகாஷ் நடிக்கும் "பாரடாக்ஸ்" டிரெய்லர் வெளியீடு





இயக்குநர் பிரியா கார்த்திகேயன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'பாரடாக்ஸ்' திரைப்படத்தில் துஷ்யந்த் ஜெயபிரகாஷ் நடிகை மீஷா கோஷல் ஆகியோர் முதன்மையான வேடங்களில் நடித்திருக்கிறார்கள். பைசல் வி காலீத் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு கே. எஸ். சுந்தரமூர்த்தி இசையமைத்திருக்கிறார். மனநிலை பிறழ்வு கொண்ட கதாபாத்திரத்தை மையப்படுத்திய இந்தத் திரைப்படத்தை தி சைலர் மேன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது.

சசிகுமார் இயக்கத்தில் வெளியாகி இருந்த ஈசன் என்ற படத்தில் நடிகை அபிநயாவின் தம்பியாக துஷ்யந்த் நடித்திருந்தார். முதல் படத்திலேயே இவர் ரசிகர்களின் மக்கள் மத்தியில் தனக்கென ஒரு ரசிகர்களின் பிடித்தார். நீண்ட இடைவேளைக்கு பிறகு இவர் கருடன் படத்தில் வில்லனாக நடித்திருக்கிறார். இந்த படத்தில் இவருடைய கதாபாத்திரம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது. இவர் பிரபல நடிகர் ஜெயபிரகாஷின் மகன் ஆவார்.

வரும் 11ம் தேதி உலகம் முழுவதும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருக்கும் இந்த திரைப்படத்தின் டிரெய்லர் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் கதையின் நாயகனான துஷ்யந்த் ஜெயப்பிரகாஷ் மனநிலை தடுமாற்றத்தில் இருப்பது போன்ற காட்சிகள் பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் இடம்பிடித்திருப்பதால் ரசிகர்களிடம் குறைந்தபட்ச எதிர்பார்ப்பை உண்டாக்கி இருக்கிறது.

# ஹாலிவுட் படங்களில் நடிக்க அழைப்பு வந்தால் போவேன் அஜித்குமார்



தமிழ் திரையுலகில் டாப் நடிகராக இருப்பவர் அஜித். திரையுலகில் உச்சத்தில் இருந்த போதிலும் கார் ரேசிலும் ஈடுபாடுடன் கலந்து கொண்டு சர்வதேச அளவில் கவனம் ஈர்த்து வருகிறார் அஜித். பெல்ஜியம் போன்ற நாடுகளில் நடைபெற்ற கார் ரேஸ் போட்டிகளில் அஜித் பங்கேற்று வருகிறார். பெல்ஜியமில் கடந்த வாரம் நடைபெற்ற கிரவுட் ஸ்டிரைக் ஸ்பா ஜிடி3 சாம்பியன்ஷிப் போட்டியின் ப்ரோ ஏ.எம். பிரிவில் அஜித்குமார் கார் ரேஸ் அணி முதலிடத்தை பிடித்து அசத்தியிருந்தது.

ஏற்கனவே, துபாயில் நடந்த ரேஸில் அஜித்தின் 'அஜித்குமார் ரேஸிங்' அணி 3வது இடம் பிடித்து சாதித்தது. இத்தாலி மற்றும் பெல்ஜியத்தில் நடந்த போட்டிகளிலும் பரிசுகளை வென்று இருந்தது. தொடர்ச்சியாக கார் ரேசிங்கில் அஜித் மற்றும் அவரது அணி கலக்கி வரும் நிலையில் பாஸ்ட் அண்ட் பியூரியஸ், எப் 1 போன்ற கார் ரேஸ் தொடர்பான புகழ்பெற்ற ஹாலிவுட் படங்களில் நடிக்க அழைப்பு வந்தால் நிச்சயம் போவேன் என்று நடிகர் அஜித்குமார் கூறியிருக்கிறார்.

தற்போது பிரான்சில் நடைபெற்று வரும் கார் ரேஸில் பங்கேற்றுள்ள அஜித்திடம் இது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு அவர் அளித்த பதில் வருமாறு: பாஸ்ட் அண்ட் பியூரியஸ், எப் 1 போன்ற படங்களில் அழைப்பு வந்தால் நிச்சயம் நடிப்பேன். எனக்கு ஆதரவு அளித்து வரும் ரசிகர்களுக்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினார்.

# மேஜர் லீக் கிரிக்கெட்; நைட் ரைடர்ஸை வீழ்த்தி 3வது வெற்றியை பதிவு செய்த எம்.ஐ. நியூயார்க்



எம்.எல்.சி. எனப்படும் மேஜர்லீக்கிரிக்கெட் தொடர்அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் நைட் ரைடர்ஸ் எம்.ஐ. நியூயர்க் அணிகள் மோதின. இந்த ஆட்டம் புளோரிடாவில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற நைட் ரைடர்ஸ் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த எம்.ஐ. நியூயார்க் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 142 ரன்கள் எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக பொல்லார்டு 50 ரன் எடுத்தார். நைட் ரைடர்ஸ் தரப்பில் ஷால்க்விக் 3 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 143 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டை இழந்து 136 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 6 ரன் வித்தியாசத்தில் எம்.ஐ. நியூயார்க் அணி திரில் வெற்றி பெற்று இந்த தொடரில் 3வது வெற்றியை பதிவு செய்தது. நைட் ரைடர்ஸ் தரப்பில் அதிகபட்சமாக உன்முகுந் சந்த் 59 ரன்கள் எடுத்தார்.

# விம்பிள்டன் டென்னிஸ்: ஜோகோவிச் 4வது சுற்றுக்கு முன்னேற்றம்



கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில்நடந்துவருகிறது. இதில்உலகின்முன்னணிவீரர், வீராங்கனைகள் விளையாடி வருகின்றனர். இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா), சகநாட்டவரான மியோமிர் கெக்மனோவிக் உடன் மோதினார். இந்த மோதலில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 63, 60, 64 என்ற நேர் செட் கணக்கில் மியோமிர் கெக்மனோவிக்கை வீழ்த்தி 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

# இந்தியா அபார பந்துவீச்சு.. தோல்வியை தவிர்க்க இங்கிலாந்து போராட்டம்

இந்தியா இங்கிலாந்து இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2வது போட்டி பர்மிங்காமில் நடந்து வருகிறது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 89.3 ஓவர்களில் 407 ரன்கள் சேர்த்து ஆல்அவுட் ஆனது. விக்கெட் கீப்பர் ஜேமி சுமித் 184 ரன்களுடன் களத்தில் இருந்தார். ஹாரி புரூக் 158 ரன்களில் ஆட்டமிழந்தார். இந்திய தரப்பில் முகமது சிராஜ் 6 விக்கெட்டும், ஆகாஷ் தீப் 4 விக்கெட்டும் சாய்த்தனர். பின்னர் 180 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை ஆடிய இந்திய அணி 3ம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 64 ரன்கள் எடுத்து மொத்தம் 244 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தது. கே.எல். ராகுல் 28 ரன்களுடனும், கருண் நாயர் 7 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். 4வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த இந்திய அணியில் கருண் நாயர் 26 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து சுப்மன் கில் களமிறங்கினார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைசதம் அடித்த கே.எல்.ராகுல் 55 ரன்களில் அவுட்டானார். இதன் பின்னர் கைகோர்த்த ரிஷப் பண்ட் சுப்மன் கில் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதிரடியாக விளையாடிய பண்ட் 48 பந்துகளில் அரைசதம் அடித்தார். நடப்பு தொடரில் சிறப்பான பார்மில் விளையாடி வரும் சுப்மன் கில், இந்த இன்னிங்சில் சதமடித்து அசத்தினார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஜடேஜா இந்த இன்னிங்சிலும் அரைசதம் அடித்தார். தொடர்ந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சுப்மன் கில் 161 ரன்களில் ஷோயப் சோயிப் பஷீரின் பந்துவீச்சில் அவரிடமே கேட்ச் கொடுத்து வெளியேறினார். இந்திய அணி 2வது இன்னிங்சில் 83 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 427 ரன்கள் அடித்திருந்தபோது டிக்ளேர் செய்தது. இந்திய அணி 607 ரன்கள் முன்னிலை பெற்றது. இதனையடுத்து 608 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி பேட்டிங் செய்த இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய கிராலி ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். பென் டக்கெட் 25 ரன்னிலும், ஜோ ரூட் 6 ரன்னிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இங்கிலாந்து அணி 50 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாடியது. 4ம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 72 ரன்கள் எடுத்துள்ளது. போப் 24 ரன்னிலும், புரூக் 15 ரன்னிலும் களத்தில் உள்ளனர். நாளை 5ம் நாள் ஆட்டம் நடைபெற உள்ளது. இங்கிலாந்து அணி வெற்றி பெற இன்னும் 536 ரன்கள் தேவைப்படும் நிலையில், இந்திய அணியின் வெற்றிக்கு இன்னும் 7 விக்கெட்டுகள் தேவைப்படுவதால், இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.